தலைப்பு - 206 கலாசார அலுவல்கள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 206 - கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே மாதம் 26 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் மாதம்ட 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின், பொது திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கலாசார அலுவல்கள் திணைக்களம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம்

நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட

மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக் கூற்றுகள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

(அ) அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அரசாங்க உத்தியோகத்தர்-களின் முற்பண ‘‘பி’’ கணக்கின் பற்று மிகுதிக்கும் திறைசேரி கணனி அச்சிட்டதின் பற்று மிகுதிக்கும் இடையில் 2004 ஆம் வருடத்திற்கு முன்னர் இருந்து நிலவி வந்த ரூபா 444,761 பெறுமதியான வேறுபாடு இனங்கண்டு, கணக்குகளில் சீர்செய்வதற்கு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	முற்பணம் ‘‘பி’’ கணக்கில் ரூபா 444,761 பெறுமதியான வேறுபாடு 2004 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. அத்துடன் திறைசேரி கணனி அச்சிட்ட பிரதியைப் பெற்றுச் பரிசோதித்த போதிலும் அந்த வேறுபாட்டை சீர்-செய்வதற்கு முடியாமல் உள்ளது என்றும், அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உதவியைப் பெற்றுக்கொண்டு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.	வேறுபாடுகளை இணங்கண்டு கணக்குகளில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதுல் வேண்டும்.

(ஆ) சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2024 திசெம்பர் 16 ஆம் திகதியிடப்பட்ட 06/2024 ஆம் இலக்க அரச கணக்கு வழிகாட்டலின் பந்தி 8.2 இற்கமைய, மேலும் அறிக்கையிடப்பட வேண்டிய நிதி சாராத சொத்துக்கள் இருக்குமாயின், அவற்றை முறையாக இனங்கண்டு அவற்றின் செலவிற்கு அல்லது செலவைக் கண்டறிய முடியாதவிடத்து மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு கணக்கிடப்படுதல் வேண்டும். அத்துடன், 2018 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதியிடப்பட்ட 267/2018 ஆம் இலக்க அரச கணக்குச் சுற்றறிக்கையின் பிரகாரமும், 2020 ஆம் ஆண்டளவில் தனது நிறுவனத்திற்குச் சொந்தமான சகல நிதி சாராத சொத்துக்களையும் கணக்கிடப்பட்டு நிறைவு செய்திருத்தல் வேண்டும். ஆயினும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், திணைக்களத்தினால் பயன்படுத்தப்படும் கட்டிடங்களைக் கொண்ட 06 காணிகள் கையகப்படுத்தப்பட்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இரண்டு காணிகளின் உரிமை இந்தத் திணைக்களத்திற்குக் கைமாற்றப்பட்டுள்ளதால், அந்தக் காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏனைய அனைத்துக் கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமையை முறைப்படி கைமாற்றிக் கொள்வதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், உரிமை கைமாற்றப்பட்டவுடன் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், உரிமை கைமாற்றப்பட்டுள்ள சொத்துக்கள் அவற்றின் செலவில் அல்லது மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். மேலும், உரிமை இதுவரை கைமாற்றப்படாத சொத்துக்களின் உரிமையைக் கைமாற்றிக் கொண்டு துரிதமாக கணக்கு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ii)	2018 திசெம்பர் 31 ஆம் திகதியிடப்பட்ட 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் நிதி சாராத சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டல் கோவையில் பந்தி 2 இற்கமைய,	சொத்துக்களின் முகாமைத்துவச் சுற்றறிக்கை 04/2018 இன் படி, திணைக்களத்திற்கு உரிமை கைமாற்றப்பட்டுள்ள இரண்டு (02) காணிகளுக்காக மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள்	சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்

	திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் அரச மதிப்பீட்டுத் திணைக்கள-த்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கைகள் பெறப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதி வரைக்கும் மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆரம்பிக்கப்பட்டுள்ளன.	
(iii)	2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் திணைக்களத்திடம் 24 வாகனங்களின் ஒதுக்கத்தில் காணப்பட்ட-துடன், அதில் மதிப்பீட்டு தொகையான மொத்தம் ரூபா.5,000,000 கொண்ட 2 வாகனங்கள் திணைக்களத்திடம் பொறுப்-பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. திணைக்களத்திடம் இருந்த மீதமுள்ள 22 வாகனங்களில் 21 வாகனங்கள் மட்டுமே கணக்கில் பதியப்பட்டிருந்தன.	ரூபா. 5,000,000 என்ற வகையில் மதிப்பிடப்பட்ட இரண்டு வாகனங்களும் மோட்டார் கார் வகையைச் சேர்ந்தவை. இந்த வாகனங்கள் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் இந்த திணைக்களத்திடம் கிடைத்துள்ளன. மதிப்பீட்டு திணைக்களம் மூலம் மதிப்பீட்டு பெறுமதி கிடைக்கப்பெறாமை காரணமாக, தற்போது திணைக்களத்திடம் கையகப்படுத்தியுள்ள 22 வாகனங்களில் ஒரு வாகனம் கணக்கில் சேர்க்கப்படவில்லை. அந்த வாகனம் அப்புறப்படுத்தப்பட (அல்லது நீக்கப்பட) உள்ளதுடன், இந்த ஆண்டு முடிவதற்கு முன் உரிமை மாற்றம் செய்யப்படாத வாகனங்களுக்கான உரிமையைப் பெறுவதற்கும், அத்துடன் அந்த வாகனங்களை மதிப்பிட்டு கணக்கில் சேர்ப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.	திணைக்களத்திடம உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள வாகனங்களை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.

கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரைகள்	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
• 1.6.1 (அ)	அரசு அலுவலர்களின் முற்பணம் ”பி” கணக்கில் உள்ள பற்று மீதிக்கும் திறைசேரி கணினியில் அச்சிடப்பட்ட பற்று மீதிக்கும் இடையில் 2004 ஆம் ஆண்டிற்கு முன்னதாக இருந்து நிலவிவரும் ரூபா. 444,761 வேறுபாட்டை அடையாளம் கண்டு, கணக்குகளைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.	1.6.1 (அ)
• 1.6.1 (ஆ)	திணைக்களத்தால் பயன்படுத்தப்படும் சொத்துக்களின் உரிமை கையகப்படுத்தி கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	1.6.1 (ஆ) i ,ii,iii

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதி ஒழுங்குவிதிகள் 50 இன் பிரகாரம், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிக்கும் போது உரிய வினைத்திறன் மற்றும் சிக்கனம் பேணப்படும் வகையில் மேற்கொள்ளுதல் வேண்டுமாயினும், 8 செலவு தொடர்புடைய மதிப்பீட்டு ஒதுக்கீட்டிற்கும் திருத்தம்	2024 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த அரச விழாக்கள் தாமதமாக நடாத்தப்பட வேண்டியிருந்ததன் காரணமாக, தொடர்புடைய செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டை விஞ்சி, நிதி ஒழுங்குவிதி 66-இன் கீழ் ஒதுக்கீடுகளை மாற்றி செலவு	உரிய வினைத்திறன் மற்றும் சிக்கனத்துடன் மதிப்பீடுகளை தயாரித்தல் வேண்டும்

	செய்யப்பட்ட ஒதுக்கீட்டிற்கும் இடையிலான மாற்றங்கள் 50 - 200 சதவீதம் வரையிலான வீச்செல்லையைக் கொண்டிருந்தன.	செய்ய நேரிட்டது என்று அறிவிக்கப்பட்டிருந்தது.	
(ஆ)	குறிப்பிட்ட ஆண்டிற்குள் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகள் முறையாகச் செய்யப்படாததாலும், மதிப்பீடுகள் சரியாகத் தயாரிக்கப்படாததாலும், மீண்டுவரும் செலவு விடயம் மற்றும் மூலதன செலவு விடயம் ஆகியவற்றுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடான ரூபா. 1,600,000/- தொகை மிகுதியாக காணப்பட்டது.	மூலதன செலவு விடயத்தின் கீழ் கட்டிடங்களை நிர்மாணிக்கும் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 1/2024 செலவின கட்டுப்பாட்டுச் சுற்றறிக்கையின்படி அப் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும், போக்குவரத்துச் செலவு விடயத்தின் கீழ், 2023 ஆம் ஆண்டில் அலுவலக உத்தியோகத்தர்களைப் போக்குவரத்துச் செய்தமைக்காக போக்குவரத்து சேவை நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா. 800,000/- இற்கு அண்மித்த பண தொகைக்காக அமைச்சரவை அனுமதி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தால், இந்தப் பணம் திசெம்பர் **31** ஆம் திகதிக்குப் பின்னரும் எஞ்சி இருந்ததாக அறிவிக்கப்பட்டது.	ஒதுக்கீடுகளை ஒதுக்கி கொண்ட பணிகளை ஆண்டுக்குள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
(இ)	10 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 4 மூலதனச் செலவு விடயங்கள் என்று மொத்தம் 14 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 255,100,000/- ஆன மொத்த ஒதுக்கீட்டில், ரூபா. 232,331,970/- மிகுதியாக இருந்தது. இந்த ஒதுக்கீடு தொடர்புடைய செலவு விடயங்களின் நிகர ஒதுக்கீட்டில் 50% முதல் 99% வரையிலான வீச்செல்லையில் காணப்பட்டது.	மூலதனச் செலவு விடயங்களின் கீழ் **4** செலவு விடயங்களுக்கான நிதி ஒதுக்கீடு மிகுதியாவதற்கு காரணங்கள் யாதெனில், சில கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை, சில கட்டுமானங்களுக்காக வெளி நிறுவனங்களுக்கு நிதி விடுவிக்கப்பட்ட போதிலும் அவை பயன்படுத்தப்படாமை, சில செலவு விடயங்களின் கீழ் மிகவும் அத்தியாவசியமான உத்தியோகபூர்வ பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டமை மற்றும் தேர்தல் பணிகள் இருந்ததால் திட்டமிடப்பட்ட சில பணிகள் தற்காலிகமாகக் காலவரையின்றித் தள்ளி வைக்கப்பட்டமை என்பனவாகும். மீண்டுவரும் செலவு விடயங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் மிகுதியாவதற்கு	நிதி ஒழுங்குவிதி 50 பிரகாரம், வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கையில் உரிய வினைத்திறனுடனும், சிக்கனமாகவும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

	காரணங்கள் யாதெனில், அரச விழாக்கள் காரணமாகக் கட்டடப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள முடியாமல் போனமை, நீர் மற்றும் மின்சாரத்திற்காக அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை, கலைக்களஞ்சிய அலுவலகத்திற்கான வாடகை செலுத்த வேண்டிய தேவை இல்லாமற் போனமை, மற்றும் மென்பொருள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமை என்பனவாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.	

3.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படுதல்

கணக்காய்வு அவதானிப்புகள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
நிதி ஒழுங்குவிதிகள் 211(i) மற்றும் நிதி ஒழுங்குவிதி 447 இன் பிரகாரம், அனைத்துப் பொறுப்புகளும் பதிவேட்டில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும், 2024 ஆம் ஆண்டுக்கான 3 செலவு விடயங்களுடன் தொடர்புடைய, 2025 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 6 கொடுப்பனவு வவுச்சர்கள் மூலம் செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா. 423,288/- ஆனது, கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் பதிவேட்டில் பதிவு செய்யப்படவோ நிதிக் கூற்றுக்களில் பொறுப்புகள் பற்றிய கூற்றில் உள்ளடக்கப்படவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இந்த கொடுப்பனவு வவுச்சர்கள் பல்வேறு காரணங்களாலும், பல்வேறு நடைமுறைச் சூழ்நிலைகளாலும் 2024 திசெம்பர் மாதக் கணக்கை தயாரிப்பதற்கு முன்னர் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதால், அவை 2024 பொறுப்புகள் பதிவேட்டில் சேர்க்கப்படவில்லை. இருப்பினும், அவை 2025 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக செலவுப் பேரேடுகளின் 14 ஆவது நிரலில் முந்தைய ஆண்டின் பொறுப்பு என்று முறையாகப் பதிவு செய்யப்பட்டு காட்டப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

3.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 ஆம் ஆண்டின் இலக்கம் 19 இன் படி தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கு அமைய, கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுப்படுத்தல் மேற்கொள்ளுதல் வேண்டுமாயினும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திணைக்களத்தின்நிதி நிர்வாகத்திற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையைத் திணைக்களம் உருவாக்கிப் பேணி வருவதாக, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், அந்த முறைமையின் செயல்திறனை காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்து, அதன்படி முறைமையைச் செயல்திறனுடன் முன்னெடுத்துச் செல்லத் தேவையான மாற்றங்களைச் செய்தல் வேண்டும். இந்த மீளாய்வுகள் எழுத்துபூர்வமாக மேற்கொள்ளப்பட்டு, அதன் ஒரு பிரதி தலைமைக்கணக் காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், அத்தகைய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறும் அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	2018 ஆம் ஆண்டின் இலக்கம் 19 இன் படி தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காய்வை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு உத்தியோ-கத்தர் ஆவார். அரச நிதி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்காக உள்ளக கணக்காய்வாளர் மற்றும் கணக்காளர் பதவிகளால் குறிப்பிட்ட பணியை ஆற்றப்படுகிறது. எமது திணைக்களத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் தொகுதியில் காணப்படும் உளளக கணக்காய்வாளர் மற்றும் கணக்காளர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, பல சந்தர்ப்பங்களில் பொது நிர்வாக அமைச்சுக்கு கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	2018 ஆம் ஆண்டின் இலக்கம் 19 இன் படி தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கு அமைய, நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
(ஆ)	உள்ளக கணக்காய்வுச் செயற்பாட்டை முறையாகச் செயற்படுத்துவதற்கு பயனுள்ள ஒரு பொறிமுறை உள்ளதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்ப-டுத்தல் வேண்டுமாயினும், அறிக்கையின் **5.1** ஆவது	அமைச்சு செயலாளரின் ஆலோசனைக்கமைய, அமைச்சின் உளளக கணக்காய்வாளரின் வழிகாட்டலின் கீழ் திணைக்களத்திற்காக உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஒன்றை தாபிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.	2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பணியாற்றுதல்

பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு அமைய, அந்தக் கட்டாயத் தேவை பூர்த்தி செய்யப்படவில்லை.	அத்துடன், ஒரு உள்ளக கணக்காய்வாளரின் கீழ் வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை உருவாக்கி, அதற்கிணங்க கணக்காய்வுக் உசாவு-தல்களை குறைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

	அவதானிப்புக்கள்			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**பெறுமதி** ரூபா	**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு**		
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை				
	XXIV அத்தியாயத்தில் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவு	631,385	சேவையை விட்டுச் சென்ற 7 ஊழியர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவைகள் தொடர்பில் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	அடையாளம் காணப்பட்ட உத்தியோகத்தர் களின் கடன் நிலுவைகளை அறவிடு-வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள தாகவும், தகவல்களை வெளிப்படுத்தக் கூடிய கடன் நிலுவைகள் குறித்து பிணையாளர்-களுக்கு அறிவிக்கப்பட்டு ள்ளதாகவும், அடையாளம் காண முடியாத	தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தில் 4.5 மற்றும் 4.6 அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

			கடன் நிலுவைகளை பதிவழிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.	
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை				
• நிதி ஒழுங்குவிதி 571	2,325,636	வைப்பிலிடப்பட்டு 2 தொடக்கம் 8 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய இரண்டு வைப்புக் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா. 2,325,636 பெறுமதியான வைப்புகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கட்டுமானக் குறைபாடுகளைப் பூர்த்தி செய்யும் வரை தற்காலிகமாகப் பணம் செலுத்துவதை நிறுத்துமாறு ஆலோசனைச் சேவை நிறுவனம் அறிவுறுத்தியுள்ளதால், ரூபா. 2,283,266.72 வைப்புத் தொகை அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கப்படவில்லை. அத்துடன், கலைஞர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தைப் புதுப்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதால், அதன் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக வைப்புக் கணக்கில்	கட்டுமான குறைப்பாடுகளை தாமதமின்றி நிறைவு செய்து உரிய சீராக்கல்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

		உள்ள ரூபா. 42,369.21 தொகையைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், எனவே அத்தொகையையும் 2025.12.31 ஆம் திகதி வரை வைப்புக் கணக்கில் வைத்திருக்கு-மாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்க-ப்பட்டது.

4. நிதி மீளாய்வு

4.1 திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்கு ஏற்புடையதான செயற்றிட்டத்தில், செயற்திறன் சுட்டிகளுக்கு அமைய எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு-களின் பெறுமானத்தை எண்ணியில் வடிவில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	செயற்றிட்டத்தில் குறிப்பிட-ப்பட்டுள்ள சில வேலைத்திட்டங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு எண்ணியல் ரீதியில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டு முதல் செயற்றிட்டத்தின் வேலைத்-திட்டங்களுக்காக செயற்திறன் சுட்டிகளுக்கமைய எதிர்பார்-க்கப்பட்ட வெளியீட்டினை எண்ணியல் ரீதியில் காண்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டது.	செயற்றிட்டத்தின் வழிகாட்டலுக்கமைவாக தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	கலைஞர்களுக்கான உதவிகள் கொடுப்பனவின் கீழ் மருத்துவ உதவி மற்றும் இறுதிச் சடங்கு உதவிகளை வழங்கும் போது, உதவி தேவைப்படும் கலைஞர்களை இனங்கண்டு அந்த கலைஞர்களுக்கு மாத்திரம் உதவிகளை வழங்க வேண்டுமாயினும், அவ்வாறு	திணைக்களத்தின் சுற்றுநிருபம் இல. 04/2017(**i**) இன்படி, கலைஞர்களுக்கு மருத்துவ உதவி வழங்கும் போது, கலைஞர்களின் வருமான மட்டம் அல்லது அவர் ஓய்வூதியம் பெறுபவரா என்பது கருத்தில் கொள்ளப்படுவதில்லை. எனவே, மருத்துவ உதவி தேவைப்படும் கலைஞர்களுக்கு	உதவி தேவைப்படுகின்ற போது கலைஞர்களை அடையாளம் காணப்பட்டு அந்த கலைஞர்களுக்கு மட்டும் உதவி வழங்கப்படுகிறது.

செய்யாமல் 2023 ஏப்ரல் 27 ஆம் திகதியிடப்பட்ட இல. 04/2017(i) என்ற திணைக்களத்தின் உள்ளக சுற்றுநிருபத்தின் அடிப்படையில் மருத்துவ உதவி மற்றும் இறுதிச் சடங்கு உதவிக்கான கோரிக்கைகளைச் சமர்ப்பித்த அனைத்துக் கலைஞர்களுக்கும் அவர்களின் வருமான மட்டம் குறித்து எந்தவொரு விசாரணையும் இன்றி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. அதன்படி, ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் தேசிய மட்டத்தில் கலை நடவடிக்கைகளில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு, அதிக வருமானம் ஈட்டும் ஆற்றல் கொண்ட கலைஞர்களுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

உதவி வழங்கப்படுகிறது.

(இ) கலைஞர்களுக்கான உதவித் திட்டங்களைச் செயற்படுத்தும் போது, கலைஞர்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தகவல் முறைமை ஒன்றைக் கலாசாரத் திணைக்களம் புதுப்பிக்கப்பட்ட நிலையில் பேணி வருதல் வேண்டும். அத்துடன், அந்தத் தகவல் முறைமையின் அடிப்படையில் பல்வேறு உதவித் திட்டங்களுக்குப் பொருத்தமான பயனாளிகளை இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், கலாசார அலுவல்கள் திணைக்களம் அதற்கமைய செயற்படவில்லை. மேலும், உதவித் திட்டங்களின் பயனாளிகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளர் பிரிவுக்குள் உள்ள கலாசார விடயங்களைக் கையாளும் உத்தியோகத்தரிடம்

அனைத்துக் கலைஞர்களையும் உள்ளடக்கும் வகையில் தரவு முறைமையைத் தயாரிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் மேற்கண்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அந்தத் தரவு முறைமையின் தகவல்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தரபடுகிறது.

இற்றைப்படுத்திய தகவல் முறைமை தயாரிக்கப்படுதல் வேண்டும்.

	ஒப்படைக்கப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்ட-மையினால், தனிப்பட்ட வகையில் பக்கச்சார்ப்புடன் தெரிவுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் ஏற்படக்கூடும்.		

4.2 பணிப் பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஜோன் டி சில்வா நினைவு அரங்கத்தை புனரமைத்து மேம்படுத்தும் திட்டம் இரண்டு கட்டங்களாக திட்டமிடப்பட்டது. அதன் முதல் கட்டம் 2014 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 2018 இல் நிறைவு செய்யப்பட்டது. அதற்காக ரூபா. 448,337,797 செலவிடப்பட்டது. இரண்டாம் கட்டத்தின் கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தம், ரூபா. 1,567,353,048 (ஏயுவு தவிர) செலவில், ஒரு வருட காலத்திற்குள் (2021/12/09 முதல் 2022/12/09 வரை) முடிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் வழங்கப்பட்டது. பின்னர், ஆலோசகர் நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில், ஒப்பந்த காலம் 2023/04/30 வரை நீட்டிக்கப்பட்டது. இருப்பினும், நீட்டிக்கப்பட்ட காலக்கெடு முடிவடையும்-போதும்கூட, திட்டத்தின் முன்னேற்றம் வெறும் 5.5% ஆகவே காணப்பட்டதால், 2024/09/10 அன்று ஒப்பந்தம் முடித்து வைக்கப்பட்டு, அந்தப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. இதன்	ஜோன் டி சில்வா நினைவு அரங்கத்தின் புனரமைப்புப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதால் இந்த நிதி ஒதுக்கீட்டை முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை	நவீனமயப்படுத்தல் பணிகளின் செயலாற்றுகை தொடர்பில் பின் தொடர் செயல்முறையை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், மேலும் அதன் மூலம் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களை தாமதப்படுத்தக் கூடாது.

	காரணமாக, 2024 ஆம் ஆண்டில் ஜோன் டி சில்வா நினைவு அரங்கத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா. 69,500,000 நிதி ஒதுக்கீடு 100% முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் இருந்தது.		
(ஆ)	2018 ஆகஸ்ட் 29 ஆம் திகதியிட்ட இல. 18/பல்(031) கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி ஆரம்பிக்கப்பட்ட தேசிய கலாபவன மண்டபத்தின் மறுசீரமைக்கும் பணி இரண்டு கட்டங்களாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது. இந்தப் பணியை இலங்கை கடற்படையின் ஊடாக நேரடி அடிப்படையில் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டி-ருந்தது. அதன்படி, 2024 ஆம் ஆண்டில் கட்டடத்தின் உட்புற கூரையை (Ceiling) சீரமைத்தல், மின்விளக்கு அமைப்புகள், பிரதான நுழைவாயிலில் கண்ணாடிக் கூரை அமைத்தல், வர்ணம் பூசுதல் மற்றும் குளிரூட்டும் முறைமைகளை (யுசை ஊழனெவைழைெபெ ளூலளவநஅள) சீரமைத்தல் போன்ற பணிகளுக்காக ரூபா. 155,000,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும், அந்த ஆண்டில் அப்பணிகள் நிறைவு செய்யப்படாத காரணத்தினால், ஒதுக்கப்பட்ட நிதியில் 91% வீதம் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல்	தேசிய கலாபவன மண்டபத்தின் புனரமைப்புப் பணிகள் இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்பட்டாலும், அந்தப் பணிகளுக்கான கொள்முதல் (ீசழஉரசநஅநவெ) நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாகவே கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இதன் விளைவாகவே, நிதி ஒதுக்கீட்டை முழுமையாகச் செலவிட (அல்லது பயன்படுத்த) முடியவில்லை.	கட்டுமான பணிகள் திட்டமிட்ட வகையில் தாமதப்படுத்தாது முடித்துவதன் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

	இருந்தது.		
(இ	விலைமதிப்பற்ற மரபுரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல திட்டம் (206-2-3-12-1409) என்பதன் கீழ், ஓவியங்களைப் பாதுகாத்தல் மற்றும் பணிப்பட்டறைகளை நடத்துவதற்காக ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும், அந்த ஆண்டிற்குள் எந்தவொரு வேலைத்திட்டமும் நடைபெறவில்லை.	ஓவியப் பாதுகாப்புப் பணிப்பட்டறைகளை நடத்துவதற்கு தேவையான பொருட்கள் இருக்கவில்லை என்றும், அப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக வெளிநாடொன்றில் விண்ணப்பிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்தப் பொருட்கள் **2024** ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் கிடைத்தமையால், அந்த ஆண்டிற்குள் பணிப்பட்டறைகளை நடாத்த முடியவில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.	ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்பத்தில் அதற்கு ஏற்புடையதான ஏனைய விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படுதல் வேணடும்.
(ஈ)	‘‘சுபாவித்த கீ வியமன’’ என்ற நிகழ்ச்சிகள் இரண்டை நடாத்துவதற்காக ரூபா. 0.7 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும், அந்த ஆண்டிற்குள் ஒரு நிகழ்ச்சி மட்டுமே ரூபா. 0.326 மில்லியன் செலவில் நடாத்தப்பட்டது. இதன் காரணமாக, ரூபா. 0.374 மில்லியன் நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப்படாமல் இருந்தது.	‘‘சுபாவித்த கீ வியமன’’ நிகழ்ச்சிகள் இரண்டை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும், திட்டமிட்ட காலப்பகுதியில் பல தேர்தல்கள் நடைபெற்றதாலும், திணைக்களத்தின் அரச நிகழ்வுகளை நடாத்த வேண்டியிருந்ததாலும், ஒரு நிகழ்ச்சியை நடத்த முடியவில்லை.	திட்டமிடப்பட்ட வகையில் பணிகளை நிறைவெற்றுதல் வேண்டும்

4.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புகள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	பிரதேச கலாசார சங்கங்கள் மற்றும் கலைக் கூடங்கள் ஊடாக நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும், அந்தச் செயல்பாடுகள்	206-02-03-06-1409 என்ற செலவினத் தலைப்பின் கீழ், பிரதேச கலாசார சங்கங்கள் மற்றும் கலைக் கூடங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சிகளுக்காக, 2024 ஆம் ஆண்டிற்குரியதாக ஒரு மில்லியன் ரூபா நிதி	எதிர்பார்க்கப்படும் பணிகளை அயைடாளம் காணப்பட்டு ஒதுக்கீடுகளை ஒதுக்கி கொள்ளுதல் வேண்டும்.

	குறிப்பாக குறிப்பிடப்படவில்லை. மேலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கான முன்னேற்ற அறிக்கையின்படி, அந்த ஆண்டிற்குள் எந்தவொரு நிகழ்ச்சியும் நடைபெறவில்லை என்று தெரியவருகின்றது.	ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ள செயல்பாடுகளைக் குறிப்பிட்டு கூற முடியாது என்றும், கலாசார சங்கங்கள் மற்றும் கலைக் கூடங்களிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டால் மட்டுமே செலவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், 2024 ஆம் ஆண்டிற்குள் இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் எந்தவொரு கோரிக்கையும் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.	
(ஆ)	தேவையுள்ள கலைஞர்களுக்கு உதவி வழங்குவதற்காக, ரூபா. 32.5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், அந்த ஆண்டிற்குள் ரூபா. 29.68 மில்லியன் மட்டுமே அந்தச் செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. தமிழ மொழியல் சமர்ப்பித்த விண்ணப்பங்களை ஆராய்ந்து இந்த உதவி திட்டத்தில் உள்ளடக்குவதற்காக தமிழ் மொழி அறிவுள்ள அலுவலர் ஒருவர் திணைக்களத்தில் இல்லாத காரணத்தினால், தமிழ் மொழியில் விண்ணப்பிக்கும் வறிய கலைஞர்கள் அநீதிக்கு உள்ளாகியிருந்தனர்.	ஒவ்வொரு வருடமும் அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் பெறப்பட்டாலும், அந்த விண்ணப்பங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக, அவற்றை திருத்தி அனுப்புவதற்காக பிரதேச செயலகங்களுக்கு மீண்டும் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், மீள கிடைக்கும் போது தாமதமாவதால், உரிய ஆண்டிற்குள் பணம் செலுத்துவதற்கு முடியாத சந்தர்ப்பங்கள் இருந்தன. இந்தச் சிக்கலைச் சரிசெய்வதற்காக, பிரதேச முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின்போது சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தேவையான ஆலோசனைகள் தற்போது வழங்கப்பட்டுள்ளன. தமிழ் மொழி மூலமான அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.	பரிசோதனை செய்து பார்த்து விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்கான முறைமை தயாரித்தல் மற்றும் ஒதுக்கீடுகளை உரிய ஆண்டில் பயன்படுத்துவதன் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

4.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 47(4) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு நிறைவடைந்து 180 நாட்களுக்குள் அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும். 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இன் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை வெளியிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த செயலாற்றல் அறிக்கை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	செயல்திறன் குறிகாட்டிகளும் அதன் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அளவுகளும், செயல்-திட்டத்தில் நிறுவப்படாமல் இருந்தமையால், செயல்திறன் அறிக்கையின் வரைவில் குறிப்பிட-ப்பட்டிருந்த 4 செயல்திறன் குறிகாட்டிகள் மற்றும் அவற்றின் அடைவு சதவீதங்களின் துல்லியத்தை உறுதிப்படுத்த முடியவில்லை.	திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்ட **4** செயல்திறன் குறிகாட்டிகள் மற்றும் அவற்றின் அடைவு சதவீதங்களுக்கு இணங்க, உண்மையான வெளியீட்டிற்கான சதவீதம் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், எதிர்வரும் ஆண்டு முதல் அது மேலும் உறுதிப்படுத்தப்படும் வகையில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	செயலாற்றுகை குறிக்காட்டிகள் மற்றும் அதில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு-களின் அளவு செவ்வையாக காண்பிக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் மற்றும் ஏனையவற்றை அச்சிடுவதற்காக (செலவினத் தலைப்பு 206-2-2-1-1409) ரூபா. 2,500,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. வரைவுச் செயல்திறன் அறிக்கையின் 1.5.4 ஆவது பந்தியின்படி, இலக்கிடப்பட்ட கலைக் களஞ்சியத் தொகுதிகளின் எண்ணிக்கை 20 ஆகும். இருப்பினும், 2014 ஆம் ஆண்டு வரை 14	இதன் இலக்கான சிங்கள கலைக்களஞ்சிய தொகுதிகளின் எண்ணிக்கை **20** ஆகும். வெளியிடப்பட்ட சிங்கள கலைக்களஞ்சிய தொகுதிகள் **13** எனக் குறிப்பிடப்பட்டிருப்பது ஓர் அச்சுப் பிழையின் காரணமாகவே ஆகும். இருப்பினும், தற்போது **14** கலைக்களஞ்சியத் தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, கடைசியாக ஒரு கலைக்களஞ்சியத் தொகுதி அச்சிடப்பட்டு வெளியாகி **6** ஆண்டுகள் ஆகின்றது.	இலக்காக கொண்டுள்ள கலைக் களஞ்சிய தொகுதிகளின் அளவினை வெளியிடல் வேண்டும்.

தொகுதிகள் மட்டுமே வெளியிடப்பட்டிருந்தன. கடைசித் தொகுதி வெளியிடப்பட்டு 9 ஆண்டுகள் கடந்துள்ளபோதிலும், அடுத்த தொகுதி இதுவரை வெளியிடப்படவில்லை.	சிங்கள கலைக்களஞ்சியத்தை இணையத்தில் ஓர் இணையவழி கலைக்களஞ்சியமாகச் செயல்படுத்துவதற்கு **2023** ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சிங்கள கலைக்களஞ்சியத்தின் முதலாவது தொகுதியும், இரண்டாவது தொகுதியும் முழுமையாக இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளதுடன், மூன்றாவது மற்றும் நான்காவது தொகுதிகள் பதிவேற்றப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	

4.5 முகாமைத்துவ குறைப்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஜோன் த சில்வா நினைவரங்கத்தை நவீனமயப்படுத்தி அபிவிருத்தி செய்யும் முதலாம் கட்டத்துடன் தொடர்புடைய ஒப்பந்தக்காரர், 3 வருட காலதாமதத்துடன், அதாவது 2018 நவம்பர் 24 அன்று, கட்டுமானப் பணிகளை முடித்து கட்டிடத்தை ஒப்படைத்திருந்த போதிலும், தாமதக் கட்டணங்கள் எனக் கழிக்கப்பட்ட ரூபா.38,658,734 எனும் தொகை, உரிய அனுமதி மற்றும் நியாயமான காரணங்களை உறுதிப்படுத்தாமல் மீண்டும் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அத்தொகையை மீண்டும் செலுத்துமாறு 2021 மே 10, அன்று ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டிருந்தும், 2025 மே 31 ஆம் திகதி வரை அத்தொகை மீளப் பெறப்படவில்லை.	ஜோன் த சில்வா நினைவரங்கத்தின் நவீனமயப்படுத்தலுடன் தொடர்புடைய ஒப்பந்தக்காரருக்கு மீண்டும் செலுத்தப்பட்ட தாமத கட்டணத்தை மீளப் பெறுவதற்காக ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, ஒப்பந்தக்காரர் அது தொடர்பாக நடுத்தீர்ப்புக்கு (Arbitration) சென்றுள்ளார். அங்கே, எதிர் உரிமை கோரலாக (Counter Claim) இந்த பணத்தைச் செலுத்தும்படியும் கோரப்பட்டுள்ளது. இந்தச் Arbitration இதுவரை முடிவடையவில்லை என்பதுடன், அதன் தீர்மானங்களின்படி அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.	பணம் செலுத்தும்போது, முறையான அங்கீகாரம் மற்றும் உறுதிப்படுத்தலுக்குப் பின்னரே பணம் செலுத்துவதை உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும், சம்பந்தப்பட்ட தொகையை விரைவாக மீளப் பெற நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

5. நல்லாட்சி

5.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம், அமைச்சின் கீழ் உள்ள ஒவ்வொரு திணைக்களத்திற்கும், அதன் கணக்கீட்டு உத்தியோகத்தரால் அத்திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் செய்வதற்காக பொருத்தமான கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாமல் உள்ள விடத்து, தேசிய கணக்காய்வுச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்குள் கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்பட வேண்டியிருந்தும், திணைக்களம் அதன்படி செயற்படவில்லை.	2017.02.09 அன்று திகதியில் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்காக இலங்கை கணக்காளர் சேவையின் III/II தரத்தில் உள்ளக கணக்காய்வாளர் பதவி ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை அப்பதவி வெற்றிடமாக உள்ளதால் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை தாபிக்க முடியவில்லை. உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டவுடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அதுவரை புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் கீழ் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரின் கீழ் இத்திணைக்களத்திற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை தாபிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.